IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**OS.No.142/2022**

**நாள்– 22.06.2023**

**சுப்பாராஜா**

**வா.சா.2** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வாதி என்னுடைய மனைவி ஆவார். எனக்கும் வாதிக்கும் திருமணமாகி 42 வருடங்கள் ஆகிறது. 1981ல் எங்களது திருமணம் நடந்தது. என்னுடைய திருமணத்தின்போது வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்தார். என்னுடைய பூர்வீக ஊர் ராஜபாளையம் ஆகும். திருமணமாகி முதல் குழந்தை 1983ல் பிறந்தது. குழந்தை பிறந்து 3 மாதங்களில் எனக்கும் வாதிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு வாதி அவருடைய பெற்றோர் ஊரான மைப்பாறை கிராமத்திற்கு சென்றுவிட்டார். குழந்தை என்னிடம் இருந்ததால் வாதி குழந்தையைக் கேட்டு மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் என் மீது வழக்கு தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது நீதிமன்ற உத்தரவின் பேரில் குழந்தை வாதி வசம் ஒப்படைக்கப்பட்டது. திருமணக்காலத்தில் நான் மத்திய கலால் துறையில் சுருக்கெழுத்தராகப் பணியில் இருந்தேன். பணி ஓய்வு பெறும் போது கண்காணிப்பாளராக ஓய்வு பெற்றிருக்கிறேன். பணியாற்றிய காலத்தில் வருமான வரிக்கணக்கைத் தாக்கல் செய்திருக்கிறேன். திருமணத்திற்கு பின்பு என்னுடைய வருமான வரிக்கணக்கில் எனது மனைவியின் நகை மற்றும் திருமணத்தின்போது வழங்கப்பட்ட ரொக்கம் ஆகியவற்றை

காண்பித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனைவிக்கு எதுவும் வழங்கவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் கூறித்தான் தயார் செய்யப்பட்டிருக்கிறது. நிரூபண வாக்குமூலத்தில் சொத்துக்களின் விபரங்களை கூறவில்லை என்றால் சரிதான். 1988 ல் வாதியின் தகப்பனார் இறந்துவிட்டார். நிரூபண வாக்குமூலத்தில் என்னுடைய மனைவியின் தந்தை இறந்ததில் இருந்து 1988 ல் இருந்து பாகம் கேட்டு வந்ததாக கூறியிருக்கிறேன். 1988 ல் இருந்து 20.05.2015 வரை பாகம் கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால் 1, 2 பிரதிவாதிகள் பாகம் தர சம்மதிக்கவில்லை. தபசில் சொத்துக்களின் புல எண்களோ, விஸ்தீரணமோ என்னால் கூற இயலாது. நிறைய சொத்துக்கள் இருப்பதால் என்னால் கூற இயலாது. பயிர்க்காப்பீடு மற்றும் அரசாங்கத்தில் இருந்து கிடைக்கக்கூடிய மானியங்கள் அனைத்தும் 1, 2 பிரதிவாதிகளுக்கு தான் கிடைத்தது என்றால் சரிதான். வாதி இந்த பிரதிவாதிகளுடன் தபசில் சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வந்தார் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை. வாதி தபசில் சொத்துக்களை கூட்டு அனுபவம் செய்துவந்தார் என்பதை நிரூபிக்க மைப்பாறை கிராமத்தைச் சேர்ந்த நபர்களை விசாரிக்க தயாராக இருக்கிறேன். எனக்கும் வாதிக்கும் திருமணத்திற்கு பின்பு நிரந்தரக் குடியிருப்பு கோவில்பட்டி ஆகும். என்னுடைய மனைவியின் திருமணத்தின்போதே பொதுக்குடும்ப சொத்துக்களில் உள்ள அவருடைய பங்குரிமைக்கு உரிய நகைகள் மற்றும் பணம் ஆகியவை கொடுக்கப்பட்டதால் 1, 2 பிரதிவாதிகள் வாதியை உரிமை நீக்கம், உடைமை நீக்கம் செய்து தபசில் சொத்துக்களை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் வாதி தபசில் சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வந்தார் என்பதற்கு எந்த ஆவணங்களும் எங்களால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. வாதி

தாக்கல் செய்த வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிப்படைந்திருக்கிறது என்றால் சரியல்ல. என்னுடைய 2 பிள்ளைகளும் பொறியாளர்கள். ஒருவர் வெளிநாட்டிலும், ஒருவர் பெங்களூரிலும் இருக்கிறார். அவர்கள் இருவருக்குமே திருமணமாகிவிட்டது. என் மனைவியைத் தவிர அவருடைய உடன்பிறந்த சகோதரிகளான 5, 6 பிரதிவாதிகள் பாகப்பிரிவினை கோரி எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 20.05.2015 க்கு பின்பு எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை கிடையாது. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட மனக்கசப்பின் காரணமாக 1ம் பிரதிவாதியை பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக அவரது தாயார் இறந்தபின்பு என்னுடைய வற்புறுத்தலின் பேரில் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய மனைவி கோரியபடி எந்த பரிகாரங்களும் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.06.22 18:06:45 +0530